# மதுரமங்கலம் இலவச ஆசிரியர் தகுதி தேர்வு பயிற்சி மையம்

## மாதிரி தேர்வு – 1

## தமிழ்

### (ஒன்பதாம் வகுப்பு முதல் பருவம்)

நேரம் : 40 Min

வினாக்கள்: 50

தொடர்புக்கு: 8428531209

1. கல்வியில் பெரியவர் என அழைக்கப்பெறுபவர் யார்?

அ. சீத்தலைச்சாத்தனார் ஆ. திருவள்ளுவர்

இ. கம்பர் ஈ. திருத்தக்கத்தேவர்

2. மாறியுள்ள சீர்களை முறைப்படுத்துக.

அ. இறப்பினை என்றும் பொறுத்தல் அதனினும்
நன்று மறத்தல் அதனை.

ஆ. இறப்பினை என்றும் பொறுத்தல் அதனினும்
மறத்தல் நன்று அதனை.

இ. பொறுத்தல் அதனை இறப்பினை என்றும்
மறத்தல் அதனினும் நன்று.

ஈ. பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று.

3. விருந்து என்பதன் இலக்கணக் குறிப்பு அறிக.

அ. பண்புப்பெயர் ஆ. தொழிற்பெயர்

இ. வினையாலணையும் பெயர் ஈ. பண்பாகுபெயர்

4. இங்கிலாந்து நாட்டு மகாராணியார் விக்டோரியா, காலையில் கண்விழித்ததும் முதலில் படித்த நூலை இயற்றியவர் யார்?

அ. பரிமேலழகர் ஆ. திருத்தக்கத்தேவர்

இ. தேவர் ஈ. மல்லர்

5. இந்தியாவை மொழிகளின் காட்சிச்சாலை என குறிப்பிட்டவர்?

அ. வைத்தியநாதன் ஆ. சீ. அரங்கநாதன்

இ. ச. அகத்தியலிங்கம் ஈ. சீ. அரங்கசாமி

6. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை இயற்றியவர் யார்?

அ. எல்லீஸ் துரை ஆ. கால்டுவெல்

இ. வீரமாமுனிவர் ஈ. ஜி.யு.போப்

7. மொழிகள் பல தோன்றி வளர அடிப்படையான மொழியை......... என்பர்.

அ. மூலமொழி ஆ. கிளைமொழி

இ. செம்மொழி ஈ. செவ்வியல் மொழி

8. உறாஅர்க் குறுநோய் உரைப்பாய் - இத்தொடரில் ...... அளபெடை இடம்பெற்றுள்ளது?

அ. இன்னிசை அளபெடை ஆ. செய்யுளிசை அளபெடை

இ. சொல்லிசை அளபெடை ஈ. ஏதுமில்லை

9. கீழ்க்காண்பவற்றுள் சொல்லிசை அளபெடை எது?

அ. எச்சம் பெறா விடின் ஆ. வரனசைஇ உள்ளேன்

இ. உண்பதூஉம் ஈ. படூஉம்

10. இதழ், நா, பல், அண்ணம் என்பன

அ. காற்றறைகள் ஆ. ஒலியணுக்கள்

இ. ஒலிஎழுத்து ஈ. ஒலிப்பு முனைகள்

11. உதடுகள் இரண்டும் பொருந்துவதனால் பிறக்கம் எழுத்துகள்

அ. ப்,ம் ஆ. ய்,ர் இ. க்,ங் ஈ. ச்,ட்

12. இவற்றுள் தவறாக பொருந்தியுள்ளது எது?

(வேறுபாடு அறிந்து பொருள் எழுதுதல்)

அ. கூறை – புடவை ஆ. உழை – மான்

இ. அளகு – கோழி ஈ. தாள் - நாக்கு

13. தென்திராவிட மொழிகளுள் ஒன்று

அ. தெலுங்கு ஆ. மால்தோ இ. உருது ஈ. தமிழ்

14. விடைக்கேற்ற வினா அமைக்க:

காலுக்கு அழகு பிறரிடம் இரந்து செல்லாமை

அ. பிறரிடம் இரந்து செல்லாமை அழகா?

ஆ. காலுக்கு அழகு எது?

இ. இரந்து செல்லாமை என்பது என்ன?

ஈ. இரந்து செல்லலாமா?

15. கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாதது எது?

அ. குயில்பாட்டு ஆ. பாஞ்சாலி சபதம்

இ. ஞானரதம் ஈ. கண்ணன் பாட்டு

16. தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை என்ற வரிகளால் புகழப்படுபவர் யார்?

அ. பாரதிதாசன் ஆ. வாணிதாசன்

இ. நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார் ஈ. பாரதியார்

17. பொருத்துக:

1. ஒற்றளபெடை - குடிதழீஇ

2. செய்யுளிசை அளபெடை – அரங்ங்கம்

3. இன்னிசை அளபெடை – உழாஅர்

4. சொல்லிசை அளபெடை – உடுப்பதூஉம்

அ. 2 3 4 1 ஆ. 3 2 4 1

இ. 2 1 3 4 ஈ. 3 4 2 1

18. காந்தியக் கவிஞர் எனப் போற்றப்படுபவர் யார்?

அ. இராமலிங்கம் பிள்ளை

ஆ. பாரதியார்

இ. பாரதிதாசன்

ஈ. வெ. இராமலிங்கனார்

19. இடைச்சொற்கள் …… பதம் ஆகும்?

அ. பகு ஆ. பகா இ. விளி ஈ. தோடை

20. இல், அல், ஆ முதலியன?

அ. எதிர்மறை இடைநிலைகள் ஆ. இறந்தகால இடைநிலைகள்

இ. நிகழ்கால இடைநிலைகள் ஈ. எதிர்கால இடைநிலைகள்

21. நான் நிரந்தரமானவன் அழிவதில்லை

எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை.. பாடியவர்?

அ. வண்ணதாசன் ஆ. கம்பதாசன்

இ. வாணிதாசன் ஈ. கண்ணதாசன்

22. மரம், நாய், நீர் என்பன எவ்வகைப் பெயர் பகாப்பதம்?

அ. வினைப் பகாப்பதம் ஆ. பெயர்ப் பகாப்பதம்

இ. இடைப் பகாப்பதம் ஈ. உரிப் பகாப்பதம்

23. “நாலுமிரண்டும் சொல்லுக்குறுதி” – எவ்வகை ஆகுபெயர்?

அ. முகத்தலளவை ஆகுபெயர் ஆ. நீட்டலளவை ஆகுபெயர்

இ. எண்ணலளவை ஆகுபெயர் ஈ. எடுத்தலளவை ஆகுபெயர்

24. பாடலின் சொற்கள் முறைமாற்றாமல், வரிசையாக அமைத்துப் பொருள் கொள்வது?

அ. ஆற்றுநீர்ப்பொருள்கோள் ஆ. நிரல்நிறைப்பொருள்கோள்

இ. மொழிமாற்றுப்பொருள்கோள் ஈ. தாப்பிசைப்பொருள்கோள்

25. ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என நாலு கவியிலும் சிறந்து விளங்கியவர் யார்?

அ. திருமங்கையாழ்வார் ஆ. திருமழிசையாழ்வார்

இ. திருப்பாணாழ்வார் ஈ. குலசேகராழ்வார்

26. பொருந்தாத இணையைக் கண்டறிக.

அ. சிறுபஞ்சமூலம் - காரியாசான்

ஆ. ஞானரதம் - பாரதியார்

இ. எழுத்து - சி.சு.செல்லப்பா

ஈ. குயில்பாட்டு - பாரதிதாசன்

27. இறைவனுக்கு சண்பக நந்தவனத்தை ஏற்படுத்திய பாண்டிய மன்னன் யார்?

அ. வங்கிய சூடாமணி பாண்டியன்

ஆ. சண்பகப் பாண்டியன்

இ. வங்கிய சேகரபாண்டியன்

ஈ. ஆ மற்றும் இ.

28. பொருந்தாது எது?

அ. நாவாய் ஆ. மிதவை இ. புணை ஈ. புணரி

29. கடல் பயணத்தை முந்நீர் வழக்கமெனக் குறிப்பிடும் நூல்?

அ. தொல்காப்பியம் ஆ. புறநானூறு

இ. பட்டினப்பாலை ஈ. அகத்தியம்

30. உலகின் எட்டாவது அதிசயம் எனப் பாராட்டப்பெறுபவர்?

அ. பிரெய்லி ஆ. டாவின்சி இ. கெலன் கெல்லர் ஈ. தாம்சன்

31. வெண்பாவில் "உயர்வு" என்னும் ஈற்றுச்சீரில் வரும் ஓரசையின் வாய்பாடு.........

அ. நாள் ஆ. பிறப்பு இ. மலர் ஈ. காசு

32. உலகில் இல்லாத பொருளை உவமித்துக் கூறுவது

அ. பிறிதுமொழிதல் அணி ஆ. உவமையணி

இ. வேற்றுப்பொருள் வைப்பணி ஈ. இல்பொருளுவமையணி

33. “கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்

கணமும் நான் சகித்திட மாட்டேன்” என்று முழக்கமிட்டவர்?

அ. தாயுமானவர் ஆ. பாரதியார்

இ. இராமலிங்க அடிகளார் ஈ. இராமலிங்கனார்

34. யாதும் ஊரே யாவரும் <u>கேளிர்</u> என்பது கணியன் பூங்குன்றனார் வாக்கு (புறநானூறு).

அடிக்கோடிட்ட சொல்லின் எதிர்ச்சொல் யாது?

அ. நண்பன் ஆ. உறவினர் இ. பகைவர் ஈ. அயலார்

35. சேர மன்னருக்குரிய துறைமுகம் எது?

அ. முசிறி ஆ. வஞ்சி இ. கொற்கை ஈ. காவிரிபூம்பட்டினம்

36. நம் தமிழர்கள் யவனர்கள் என்று கீழ்க்கண்டவர்களை அழைத்தனர்?

அ. கிரேக்கர், சீனர்கள் ஆ. கிரேக்கர், அமெரிக்கர்கள்

இ. கிரேக்கர், உரோமனியர்கள் ஈ. சீனர்கள், உரோமனியர்கள்

37. திருவிளையாடல் புராணத்தில் உள்ள காண்டங்களுள் அதிக படலங்களை கொண்ட காண்டம் எது?

அ. கூடல் காண்டம் ஆ. திருவாலவாய்க் காண்டம்

இ. மதுரைக் காண்டம் ஈ. புகார்க் காண்டம்

நல்லதோர் லட்சியம் வெல்வது நிச்சயம்

38. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என மொழிந்தவர் யார்?

அ. அதியமான் ஆ. கம்பர் இ. தேவர் ஈ. ஔவையார்

39. பகுபதத்தில் குறைந்தளவு இருக்க வேண்டிய உறுப்புகள்?

அ. பகுதி, சந்தி ஆ. பகுதி, சாரியை

இ. பகுதி, விகுதி ஈ. இடைநிலை, சாரியை

40. பொருத்துக:

1. முகத்தல் அளவை ஆகுபெயர் - தலைக்கு ஒரு பழம் கொடு

2. எடுத்தல் அளவை ஆகுபெயர் - இரண்டு லிட்டர் தா

3. எண்ணல் அளவை ஆகுபெயர் - ஆறு முழம் கொடு

4. நீட்டல் அளவை ஆகுபெயர் - பத்துக் கிலோ கொடு

அ. 2 3 4 1 ஆ. 2 4 1 3 இ. 2 1 3 4 ஈ. 2 1 4 3

41. தோழர் ஜீவானந்தம் அவர்களால், “நீ மீண்டும் தோன்றிய பாரதியடா” எனப் பாராட்டப்பட்டவர் யார்?

அ. திரு.வி. கல்யாணசுந்தரனார்

ஆ. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார்

இ. வல்லிக்கண்ணன்

ஈ. சி.சு.செல்லப்பா

42. உலகத்தமிழரிடையே தமிழுணர்வை உருவாக்க பெருஞ்சித்திரனார் ஏற்படுத்திய இதழ்களுள் ஒன்று?

அ. முல்லை ஆ. தமிழ்மலர் இ. தென்மலர் ஈ. தென்மொழி

43.எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்

இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே...

என்று முழங்கிய கவிஞர் யார்?

அ. பாரதிதாசன் ஆ. பாரதியார் இ. திரு.வி.க ஈ. குவிமணி

44. பொருந்தாது எது? (இலக்கணக் குறிப்பறிதல்)

அ. பதமலர் - உம்மைத்தொகை

ஆ. தொல்லுலகு - பண்புத்தொகை

இ. நுந்தை - மரூஉ

ஈ. காலம் - தொழிற்பெயர்

45. "உன்னையே நீ அறிவாய்" என்றவர் யார்?

அ. பிளாட்டோ ஆ. மெகஸ்தனிஸ் இ. சிலி ஈ. சாக்ரடீஸ்

46. ஒற்றளபெடையில் அளபெடுக்கும் மெய்யெழுத்துகளின் எண்ணிக்கை?

அ. 10 ஆ. 12 இ. 11 ஈ. 9

47. பொருந்தாது எது?

அ. கண்டங்கத்திரி ஆ. சிறுவழுதுணை

இ. சிறுநாவற்பூ ஈ. பெருமல்லி

48. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்

கவலை உனக்கில்லை ஒத்துக்கொள் யாருடைய கவிதை?

அ. கவிமணி ஆ. சுரதா

இ. பாரதிதாசன் ஈ. வெ. ராமலிங்கனார்

49. இருட்பகை இரவி இருளெனத் தம்மையும்

கருதிக் காய்வனோ என்றயிர்த்து இருசிறைக் -

இப்பாடலில் பயின்றுவந்துள்ள அணியைச் சுட்டுக?

அ. பிறிதுமொழிதல் அணி ஆ. உவமையணி

இ. வேற்றுமையணி ஈ. தற்குறிப்பேற்ற அணி

50. குலோத்துங்கச் சோழனின் அவைப்புலவராக விளங்கியவர்?

அ. செயங்கொண்டார் ஆ. ஒட்டக்கூத்தர்

இ. கம்பர் ஈ. புகழேந்திப்புலவர்

## வெற்றி எளிதல்ல....! தோல்வி முடிவல்ல...!

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |